ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

எனது இல: PS/FSD/Crcular(2022)/01 சுற்றிக்கை இல: PS/FSD/Circular/13/2022

2022 செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
ஆளுநர்களின் செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு

**உணவுக் கையிருப்புப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கினை உறுதிப்படுத்துவதற்காகக் கிராமியப் பொருளாதாரப் புத்துயிரூட்டல் கேந்திர நிலையங்களை வலுவூட்டுவதற்கான பல்வகைத் துறைசார் ஒருங்கிணைந்த பொறிமுறை**

உணவுக் கையிருப்புப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கினை உறுதிப்படுதுதல் மற்றும் பொருளாதாரப் புத்துயிர் கேந்திர நிலையங்களை வலுவூட்டல் என்ற தலைப்பில் மாண்புமிகு சனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் அவர்களால் முன்வைக்கப்பட்ட முறையே 22/1360/601/005 மற்றும் 2022.09.05 ஆந் திகதி மற்றும் 22/1282/605/077 மற்றும் 2022.08.30 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்துக்கமைய தாபிக்கப்பட்டுள்ள உணவுக் கையிருப்புப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான பல்வகைத் துறைசார் ஒருங்கிணைந்த பொறிமுறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்கள் இச்சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்படுகின்றது.

அரசின் உணவுக் கையிருப்புப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்குகை

**"அனைத்துப் பிரஜைகளுக்கும் நாட்டில் நிலவும் எந்தவொரு நிலைமையின் கீழும் சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான போதுமான உணவினை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை"**

02. இந்த நோக்குகைக்கமைய நாட்டில் எந்தவொரு பிரஜையும் உணவு இல்லாமையினால் பட்டினியில் வைக்கப்படக் கூடாது. எந்தவொரு பிள்ளையும் போஷாக்கின்மை நிலைமைக்கு உள்ளாகக் கூடாது. இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமெனில் நாட்டின் அனைத்துக் குடும்பங்களையும் வறுமையிலிருந்து மீட்கவேண்டும். அதன்படி சகல குடும்பங்களையும் வறுமையிலிருந்து மீட்டு உணவுக் கையிருப்புப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி போஷாக்கின்மையிலிருந்து பிள்ளைகளை விடுவித்துக் கொள்வதற்காகத் துரிதமான தேசிய பல்வகைத் துறைசார் ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டத்தை அரசு தயாரித்துள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மாண்புமிகு சனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதமர் தொடக்கம் கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்த அரசுப் பொறிமுறையும் அதேபோன்று தனியார்துறையும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தொழில் நிபுணர்களும் சமயத் தலைவர்களும் அரசியல்வாதிகளும் உள்ளடங்கும் வகையில் இந்தப் பல்வகைத் துறைசார் ஒருங்கிணைந்த பொறிமுறை பின்வருமாறு அறிமுகப்படுத்தி வைக்கப்படுகின்றது.



ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන
தொலைபேசி
Telephones 011 2354354 011 4354354
ෆැක්ස්
தொலைநகல்
Fax 011 2340340
ඊ-තැපැල
மின்-அஞ்சல்
e-mail ps@presidentsoffice.lk

## 2.1 தேசிய உணவுக் கையிருப்புப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான சபை

தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டத்தைத் தேசிய மட்டத்தில் பல்வகைத் துறைசார் ஒருங்கிணைப்பினைப் பலப்படுத்துதல் தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான சபையின் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான சபையினால் தேசிய மட்டத்தில் கொள்கைகளை வகுத்தல் மற்றும் வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான சபையின் ஒழுங்கமைப்பு பின்வருமாறு:

1. மாண்புமிகு சனாதிபதி (தலைவர்)
2. மாண்புமிகு பிரதமர்
3. சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய விடயப்பொறுப்பு அமைச்சர்
4. கமத்தொழில் அமைச்சர்
5. கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சர்
6. கால்நடை வளங்கள் அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சர்
7. சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் விடயப்பொறுப்பு அமைச்சர்
8. கல்வி விடயப்பொறுப்பு அமைச்சர்
9. பெருந்தோட்டக் கைத்தொழில் விடயப்பொறுப்பு அமைச்சர்
10. வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு விடயப்பொறுப்பு விடயப்பொறுப்பு அமைச்சர்
11. பொதுநிர்வாக, மாகாணசபைகள், மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சர்
12. நிதி மற்றும் திட்டமிடல் விடயப்பொறுப்பு விடயப்பொறுப்பு அமைச்சர்
13. வெகுசன ஊடக விடயப்பொறுப்பு விடயப்பொறுப்பு அமைச்சர்
14. மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் விடயப்பொறுப்பு அமைச்சர்
15. உள்நாட்டலுவல்கள் விடயப்பொறுப்பு விடயப்பொறுப்பு அமைச்சர்
16. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி விடயப்பொறுப்பு அமைச்சர்
17. வர்த்தக, வாணிப அலுவல்கள் விடயப்பொறுப்பு அமைச்சர்
18. நீர்வழங்கல் விடயப்பொறுப்பு அமைச்சர்
19. மேற்கூறிய விடயங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர்கள்
20. சகல மாகாண ஆளுநர்கள்
21. உணவு மற்றும் போஷாக்குத் தொடர்பான அறிவுள்ள அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள்
22. உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான சபையினால் அழைக்கப்படும் தனியார்துறைப் பிரதநிதிகள் மற்றும் தொழில் நிபுணர்கள்

அழைப்பாளர் - தலைவர், உணவுப் பாதுகாப்புப் பிரிவு, சனாதிபதி அலுவலகம்
கூட்டங்கள் - மூன்று மாதங்களுக்கு ஒருதடவை

## 2.2 உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான தேசிய ஒருங்கிணைந்த பொறிமுறை

தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களின் கொள்கை மட்டத்திலான பல்வகைத் துறைசார் ஒருங்கிணைப்புக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான தேசிய ஒருங்கிணைந்த பொறிமுறை பின்வருமாறு நிறுவப்படுகின்றது:

1. சனாதிபதியின் செயலாளர் (தலைவர்)
2. பிரதமரின் செயலாளர்
3. செயலாளர், சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய விடயப்பொறுப்பு அமைச்சு
4. செயலாளர், கமத்தொழில் விடயப்பொறுப்பு அமைச்சு
5. செயலாளர், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சு
6. செயலாளர், கால்நடை வளங்கள் அபிவிருத்தி விடயப்பொறுப்பு அமைச்சு
7. செயலாளர், வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு விடயப்பொறுப்பு அமைச்சு
8. செயலாளர், சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் விடயப்பொறுப்பு அமைச்சு
9. செயலாளர், கல்வி விடயப்பொறுப்பு அமைச்சு

10. செயலாளர், பெருந்தோட்டக் கைத்தொழில் விடயப்பொறுப்பு அமைச்சு
11. செயலாளர், பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சு
12. செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் விடயப்பொறுப்பு அமைச்சு
13. செயலாளர், வெகுசன ஊடக விடயப்பொறுப்பு அமைச்சு
14. செயலாளர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் விடயப்பொறுப்பு அமைச்சு
15. செயலாளர், உள்நாட்டலுவல்கள் விடயப்பொறுப்பு அமைச்சு
16. செயலாளர், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி விடயப்பொறுப்பு அமைச்சு
17. செயலாளர், வர்த்தக வாணிப அலுவல்கள் விடயப்பொறுப்பு அமைச்சு
18. செயலாளர், நீர்வழங்கல் விடயப்பொறுப்பு அமைச்சு
19. சகல மாகாண பிரதம செயலாளர்கள்
20. சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள்
21. அபிவிருத்தித் தரப்பினரின் பிரதிநிதிகள்
22. புத்திஜீவிகள் மற்றும் தொழில்வல்லுநர்கள்
23. தலைவர், பசுமை விவசாய கருமமாற்றும் நிலையம், பாதுகாப்பு அமைச்சு
24. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான ஒருங்கிணைந்த பொறிமுறையினால் அழைக்கப்படும் வேறு நபர்கள்

அழைப்பாளர் - பணிப்பாளர் நாயகம், தேசியத் திட்டமிடல் திணைக்களம்
கூட்டங்கள் - இரண்டு மாதங்களுக்கு ஒருதடவை

### 2.3 உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைக் குழு

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களின் தேசிய மட்டத்திலான ஒருங்கிணைப்புக்காக இந்தத் தொழில்நுட்ப ஆலோசனக் குழு நிறுவப்படுவதுடன் அந்தக் குழுவுக்குப் பின்வரும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

- உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் கொள்கைரீதியிலான பிரச்சினைகளை மீளாய்வு செய்தல், பரிந்துரைகளை முன்வைத்தல், திட்டமிடல், மூலோபாய வழிமுறைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்
- தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் தொடர்பாக மேற்பார்வை செய்தலும் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான தேசிய ஒருங்கிணைந்த பொறிமுறைக்கு அறிக்கையிடுதலும்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் ஒழுங்கமைப்பு பின்வருமாறு:

1. பிரதமரின் செயலாளர் (தலைவர்)
2. பணிப்பாளர் நாயகம், தேசியத் திட்டமிடல் திணைக்களம்
3. பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம்
4. பணிப்பாளர் நாயகம், சுகாதார சேவைகள் திணைக்களம்
5. பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம்
6. பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம்
7. பணிப்பாளர் நாயகம், விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
8. பணிப்பாளர் நாயகம், தேசியக் கல்வி நிறுவனம்
9. பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம்
10. பணிப்பாளர் நாயகம், தேசிய உயிரின அபிவிருத்தி அதிகார சபை
11. பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகாரசபை
12. ஆணையாளர், நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு திணைக்களம்
13. பணிப்பாளர் நாயகம், சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்
14. பணிப்பாளர் நாயகம், சனத்தொகை புள்ளிவிபரத் திணைக்களம்
15. பணிப்பாளர் நாயகம், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிறுவனம்

16. பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்
17. பாதுகாப்பு அமைச்சின் பசுமை விவசாயக் கருமமாற்றல் நிலையத்தின் பிரதிநிதியொருவர்
18. தேவைக்கமைய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட துறைகளின் தொழில்நுட்ப நிபுணர்கள்
19. புத்திஜீவிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள்
20. வர்த்தகச் சபையின் பிரதிநிதிகள் (தனியார்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக)
21. அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள்

அழைப்பாளர் - பிரதிப் பணிப்பாளர் நாயகம், சமூக சுகாதார சேவைகள் / போஷாக்கு(சுகாதார அமைச்சு)
கூட்டங்கள் - இரண்டு மாதங்களுக்கு ஒருதடவை

### 2.4 உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான மாகாண ஒருங்கிணைந்த பொறிமுறை

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான மாகாண அடிப்படையிலான பல்வகைத் துறைசார் ஒருங்கிணைப்பு மற்றும் அதன் முன்னேற்றம் உட்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகத் தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான சபைக்கு அறிக்கையிடுவதற்காக அனைத்து மாகாணங்களுக்கும் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான ஒருங்கிணைந்த பொறிமுறைகள் வீதம் நியமிக்கப்படும். மாகாண ஒருங்கிணைந்த பொறிமுறைக்குப் பின்வரும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

- மாகாணங்களுக்கான விசேட உணவு மற்றும் போஷாக்கு மூலோபாயங்களை இனங்காணுதல் மற்றும் மாவட்ட பிரதேச மட்டத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான நிகழ்ச்சிதிட்டங்களுக்கு வழிகாட்டுதல்
- தேவையான சந்தர்ப்பங்களில் ஏனைய குழுக்களுக்கு முன்னேற்றம் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக அறிக்கையிடுதல்
- வருடாந்த மாகாணத் திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்

மாகாண ஒருங்கிணைந்த பொறிமுறையின் ஒழுங்கமைப்பு பின்வருமாறு:

1. கௌரவ மாகாண ஆளுநர் (தலைவர்)
2. பிரதம செயலாளர்
3. குறிப்பிட்ட மாவட்டச் செயலாளர்கள்
4. நகர முதல்வர் / தலைவர்கள் (மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை)
5. ஆளுநரின் செயலாளர்
6. மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள்
7. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
8. உள்ளூராட்சி ஆணையாளர்
9. ஆயுர்வேத ஆணையாளர்
10. மாகாணக் கல்விப் பணிப்பாளர்
11. மாகாண காணி ஆணையாளர்
12. மாகாண விவசாயப் பணிப்பாளர்
13. மாகாண நீர்ப்பாசன ஆணையாளர்
14. மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர்
15. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி), இலங்கை மகாவலி அதிகாரசபை
16. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்
17. மாகாண கால்நடைவள அபிவிருத்திப் பணிப்பாளர்
18. பிரதிநிதி, பசுமை விவசாய கருமமாற்றல் நிலையம், பாதுகாப்பு அமைச்சு
19. புத்திஜீவிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள்
20. வர்த்தகச் சமூகப் பிரதிநிதிகள்
21. அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள்

22. வேறு (குழுவினால் தீர்மானிக்கப்படுமாறு)

அழைப்பாளர் - மாகாண பிரதம செயலாளர்
கூட்டங்கள் - மாதாந்தம்

### 2.5 உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறை

மாவட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வு செய்தல், ஆராய்தல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு பொறிமுறை வீதம் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறைகள் நிறுவப்படும். உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறைக்குப் பின்வரும் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- மாவட்டத்திற்குள் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட மாவட்டத்துக்குள் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி போஷாக்கின்மையை இல்லாமற்செய்தல்
- பொதுவாக மாவட்டத்தினுள் உணவு மற்றும் போசாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்கான தகுந்த எடுகோள்கள் அடிப்படையிலான பங்களிப்புகளை இனங்காணுதல், திட்டமிடல், அவற்றுக்கு முன்னுரிமை வழங்குதல்
- உணவுப் பாதுகப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது பெற்றுக்கொண்ட முன்னேற்றத்தை மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல், அவை சம்பந்தமான திட்டங்கள் மற்றும் மூலோபாயங்களை இற்றைப்படுத்தல்

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான மாவட்ட ஒருங்கிணைப்புப் பொறிமுறை பின்வருமாறு:

1. மாவட்டச் செயலாளர் (தலைவர்)
2. மேலதிக மாவட்டச் செயலாளர்
3. பணிப்பாளர் (திட்டமிடல்)
4. பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்
5. மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள்
6. மாகாண ஆயுர்வேத ஆணையாளர்
7. வலயக் கல்விப் பணிப்பாளர்
8. சமூக வைத்திய ஆலோசகர்
9. தாய்-சேய் சுகாதார வைத்திய உத்தியோகத்தர்
10. கால்நடை வைத்திய உத்தியோகத்தர்
11. புள்ளிவிபரவியல் நிபுணர்
12. கமத்தொழில் பணிப்பாளர்
13. வதிவிட கருத்திட்ட முகாமையாளர், இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை
14. கடற்றொழில் பணிப்பாளர்
15. சமூர்த்தி பணிப்பாளர்
16. நீர்ப்பாசனப் பணிப்பாளர்
17. உதவி கமநல சேவை ஆணையாளர்
18. மாவட்ட நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்
19. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் / ஆரம்ப சிறுவர்பராய அபிவிருத்தி உத்தியோகத்தர் / மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் / விதாதா உத்தியோகத்தர் / தகவல் உத்தியோகத்தர்
20. பிரதிநிதி, பசுமை விவசாய கருமமாற்றும் நிலையம், பாதுகப்பு அமைச்சு
21. வர்த்தக சமூகத்தின் பிரதிநிதிகள்
22. அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் (விவசாய மற்றும் மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட)
23. வேறு தகுந்த பிரதிநிதிகள்

அழைப்பாளர் - பணிப்பாளர் (திட்டமிடல்), மாவட்டச் செயலகம்
கூட்டங்கள் - மாதாந்தம்

**2.6 உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குத் தொடர்பான பிரதேச ஒருங்கிணைந்த பொறிமுறை**

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் ஓர் பொறிமுறை வீதம் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான பிரதேச ஒருங்கிணைந்த பொறிமுறை நிறுவப்படும். உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான பிரதேச ஒருங்கிணைந்த பொறிமுறைக்குப் பின்வரும் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

- குடியிருப்பாளர் மட்டத்தில் வாழ்வாதாரச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள கிராமியப் பொருளாதாரப் புத்துயிரூட்டல் மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழுக்களுக்கு வழிகாட்டுதல்
- பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
- போஷாக்குக் குறைப்பாடு தொடர்பான ஆபத்தினை எதிர்நோக்கியுள்ள குடியிருப்பாளர்களை கிராம உத்தியோகத்தர் பிரிவு அடிப்படையில் இனங்காணுதலும் அவ்வாறான குடியிருப்பாளர்களின் போஷாக்குத் தன்மையினை மேம்படுத்துவதற்கான குறிப்பிட்ட பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட தலையீடுகளை அமுல்படுத்துதலும்
- ஒட்டுமொத்தமாகப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்காகப் பெறுபேறுகளின் அடிப்படையிலான தலையீடுகளை இனங்காணலும் திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்துதலும்
- பிரதேச செயலாளர் பிரிவுகளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அடையக்கூடிய முன்னேற்றங்களை மேற்பார்வை செய்தலும் மதிப்பீடு செய்தலும் மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைந்த பொறிமுறைக்கு அறிக்கையிடுதலும்

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான பிரதேச ஒருங்ணைந்த பொறிமுறையின் ஒழுங்கமைப்புப் பின்வருமாறு:

1. பிரதேச செயலாளர் (தலைவர்)
2. உள்ளூராட்சிப் பிரதிநிதிகள் (நகர சபை மற்றும் பிரதேச பை)
3. சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்
4. வலயக் கல்விப் பணிப்பாளர்
5. செயலாளர் / ஆணையாளர் (பிரதேச/நகர/ மாநகர சபைகள்)
6. அரச விலங்கின மருத்துவ உத்தியோகத்தர்கள்
7. ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்
8. நீர்ப்பாசனத் திட்டங்களின் வதிவிட முகாமையாளர்கள்
9. பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
10. விவசாய ஆலோசகர்
11. பிரிவு முகாமையாளர், இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை
12. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் / ஆரம்ப சிறுவர்பராய அபிவிருத்தி உத்தியோகத்தர் / மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் / சமூகசேவை உத்தியோகத்தர் / நன்நடத்தை உத்தியோகத்தர்
13. புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்
14. சமுர்த்தி உத்தியோகத்தர்
15. முகாமையாளர்கள் / முதியோர் இல்லங்கள்
16. முகாமையாளர்கள் / சிறுவர் இல்லங்கள்

17. அரச சார்பற்ற மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள்(விவசாய மற்றும் கடற்றொழில் அமைப்புகள் உட்பட)
18. நிதி நிறுவனங்கள் / வர்த்த வங்கிப் பிரதிநிதிகள்
19. வேறு தகுந்த உத்தியோகத்தர்கள்

அழைப்பாளர் - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்), பிரதேச செயலகம்
கூட்டங்கள் - மாதாந்தம்

**2.7 கிராமியப் பொருளாதார புத்துயிரூட்டல் கேந்திர நிலையம்**

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் உள்நாட்டலுவல்கள் சுற்றிக்கை இல. 9/2022 மற்றும் 2022.09.06 ஆந் திகதிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கிராமியப் பொருளாதாரப் புத்துயிரூட்டல் கேந்திர நிலையமாகத் துரிதமாக வலுவூட்டுவது தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சுற்றிக்கைக்கமைய நாட்டிலுள்ள அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கிராமியப் பொருளாதாரப் புத்துயிரூட்டல் கேந்திர நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தக் கிராமியப் பொருளாதாரப் புத்துயிரூட்டல் மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழு பின்வரும் உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருக்கும்:

1. பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
2. கிராம உத்தியோகத்தர்
3. குடும்பச் சுகாதார சேவை உத்தியோகத்தர்
4. சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
5. அலகு முகாமையாளர், இலங்கை மகாவலி அதிகாரசபை
6. விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்
7.. பாடசாலை அதிபர்கள்
8. அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் (விவசாய மற்றும் சிவில் அமைப்புகள் தவிர்ந்த)
9. சமய அமைப்புகளின் பிரதிநிதிகள்
10. வேறு (குழுவினால் தீர்மானிக்கப்படுமாறு)

குழுவினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பொருளாதாரப் புத்துயிரூட்டலை ஏற்படுத்தி வறுமையை ஒழித்தல், போஷாக்கின்மையிலிருந்து பிள்ளைகளை மீட்டல், பிரதேச உணவுப் பாதுகாப்பு உட்பட வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல் வேண்டும். இந்தக் குழு மாதாந்தம் கூடி பின்வரும் இலக்குகளை அடையவேண்டும்:

- தமது பிரிவுக்குள் ஏதேனுமோர் குடும்பமோ அல்லது நபரோ உணவை பெற்றுக்கொள்ள முடியாமையினால் பட்டினியில் இருக்காமையை உறுதிப்படுத்துதல்
- தமது கிராம உத்தியோகத்தர் பிரிவில் எந்தவோர் பிள்ளையும் போஷாக்கின்மையினால் பாதிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துதல்
- தமது பிரிவிலுள்ள அனைத்துக் குடும்பங்களையும் நபர்களையும் சர்வதேச வறுமை மட்டத்துக்கு அப்பால் மேலுயர்த்தி வைத்தல்
- விவசாயம், வர்த்தகம், பொருளாதாரம், சூழல் மற்றும் சமூகச் செயல்திட்டங்களில் அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கி அவற்றை நடைமுறைப்படுத்துதல்
- இறுதியாக தமது பிரிவை உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொண்ட மற்றும் போஷாக்கின்மையை முற்றாக நீக்கிய ஓர் பிரிவாக அபிமானத்துடன் அறிவித்தல்
- மேற்கூறிய நோக்கங்களை அடைவது கடினமாக இருப்பின் அதற்கான காரணங்களை பிரதேச உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கிற்கான ஒருங்கிணைந்த பொறிமுறைக்கு அறிவித்தல் வேண்டும்.

03. பிரதேச செயலாளரினால் கிராம உத்தியோகத்தர் பிரிவு அடிப்படையில் கிராமியப் பொருளாதாரப் புத்துயிரூட்டல் மற்றும் உணவுப் பாதுகாப்புக் குழுக்களை நியமித்து அவற்றுக்கான குழு உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும். பிரதேச செயலாளர் குழுவின் ஒழுங்கிணைப்பாளரையும் அழைப்பாளரையும் பெயர் குறிப்பிட்டு நியமிப்பார்.

04. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு சகல வணக்கஸ்தலங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள், தனியார் வங்கிகள் மற்றும் பாடசாலைகள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் உள்வாங்கக் கூடியவாறு நிகழ்ச்சித்திட்டங்களைத தயாரித்தல் வேண்டும்.

05. கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஒவ்வொரு குடும்பங்கள் மற்றும் நபர்களினால் மேற்கொள்ளப்படும் உணவு உற்பத்தி, உணவுத் தயாரிப்பு மற்றும் விநியோகம் அல்லது வேறு பொருளாதார நடவடிக்கைகளை முன்கூட்டியே திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவர்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள், எரிபொருள், விதை வகைகள், பசளை உட்பட விவசாய இரசாயனப் பொருட்களை உரிய நேரத்தில் நியாயமான விலைகளில் வழங்குவதற்கான திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும்.

06. இதற்காக ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் செயற்படுவதனூடாகச் செயற்றிறன்களை மேம்படுத்திக்கொள்ள முடியும். இதற்காகக் குழு உத்தியோகத்தர்கள் பிரிவிலுள்ள சகல குடியிருப்பாளர்களுடனும் கலந்துரையாடி அந்த ஒவ்வொரு குடியிருப்பு அலகுகளிலும் எதிர்வரும் போகங்களுக்காக விவசாய உற்பத்திகளைத் திட்டமிடுதலும் அவற்றுக்குத் தேவையான உள்ளீடுகள் மற்றும் பயிர்வகைகள், பயிரிடப்படும் பரப்பளவு, எதிர்பார்க்கப்படும் விளைச்சல், விற்பதற்கான வழிமுறைகள் போன்ற தரவுகளைக் குடியிருப்பாளர் அலகு அடிப்படையில் தயாரித்தல் வேண்டும்.

07. பிரிவின் ஒவ்வொரு குடியிருப்பாளர் அலகுகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து தமது பிரிவுக்குத் தேவையான அனைத்து விவசாய உள்ளீடுகள் தொடர்பான மதிப்பீடொன்றைத் தயாரித்து உரிய நேரத்தில் சகல குடும்பங்களுக்கும் தேவையான உள்ளீடுகளை வழங்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதுடன் அவர்கள் அறுவடை செய்யும் காலத்தில் அவர்களது விளைச்சல்களைச் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளையும் செய்துகொடுத்தல் வேண்டும்.

08. தேசிய தரவுக் கட்டமைப்பினை இற்றைப்படுத்துவதற்காகச் சகல குடியிருப்பாளர்கள் அலகுகளின் உற்பத்திகள் தொடர்பான தரவுகளையும் நிகழ்நிலையூடாக (on line) மாதாந்தம் பதிவேற்றம் செய்வதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

09. கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குள் விவசாயத் தரவுகளை உரிய நேரத்தில் சீரான முறையல் பெற்றுக்கொள்ளுதல், சரியான தீர்மானங்கள் மற்றும் முடிவுகளை எடுத்தல் அவசியமாகும். இதற்காகக் குறிப்பிட்ட தரவுகளைப் பிரிவுகளுக்குள் திரட்டுவதற்காகத் தேவைப்படும் வழிகாட்டல்கள் எதிர்வரும் நாட்களில் இக்குழுக்களுக்கு வழங்கப்படும். இதற்கமைய சனாதிபதி அலுவலகத்தின் உணவுப் பாதுகாப்புப் பிரிவினால் வடிவமைக்கப்பட்டுள்ள இணையத்தளம் மற்றும் கையடக்கச் செயலிகளுக்கு (Mobile App) நிகழ்நிலையூடாகத் தமது பிரிவின் உணவு கையிருப்புப் பாதுகாப்புத் தொடர்பான தரவுகளை பதிவேற்றம் (up load) செய்யவேண்டும்.

10. மேலும் இந்தச் சுற்றிக்கையின் மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள பல்வகைத் துறைசார் ஒருங்கிணைந்த பொறிமுறைகளைத் தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டங்களில் 2022 செத்தெம்பர் 23 ஆந் திகதிக்கு முன்னர் நிறுவுதல் வேண்டும்.

**ஒப்பம்: ஈ.எம்.எஸ்.பீ.ஏக்கநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்

பிரதிகள்:

| | | | |
|---|---|---|---|
| 01. | பிரதமரின் செயலாளர் | - | தகவலுக்காக |
| 02. | அமைச்சரவையின் செயலாளர் | - | தகவலுக்காக |